RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — Sr Vascular Surgeon — 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari — Sr Eye Surgeon — 9444 256784
Dr Sathish Rajkumar — Laparoscopic & Laser Surgeon — 9445 40179.3
Dr Shanthi R — Sr Vascular Surgeon — 9884 65094.5
Dr Salma R — General Physician — 87780 6774.2
Dr Praveena E — Sr ENT Surgeon — 9944 10044.3

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் சென்னை, 28 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 139

பஞ்சகர்மா சிகிச்சைக்கான சர்வதேச மையமாக கேரளம் உருவாகலாம்: குடியரசுத் தலைவர்



சென்னை – 28 நவம்பர், 2026 இந்தியாவின் ஆயுர்வேதப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் கேரளத்துக்குச் சிறப்பான இடம் உண்டு என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார். அஷ்டவைத்யர்களும், வைத்யரத்னம் குழுமமும் தலைமுறைகள் கடந்து மருத்துவ அறிவை வளப்படுத்தி, ஆயுர்வேதத்தின் சர்வதேசப் புகழை மேம்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

திருச்சூரில் உள்ள வைத்யரத்னம் ஆயுர்வேதக் கல்லூரியின் பொன்விழா நிறைவு நிகழ்ச்சியில் வெள்ளிக்கிழமை உரையாற்றிய குடியரசுத் தலைவர், பஞ்சகர்மா சிகிச்சைக்கான சர்வதேச மையமாக கேரளம் உருவாக முடியும் என்றார்.

ஆயுர்வேதத்துக்காக 50 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் அந்தக் கல்வி நிறுவனத்துக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

ஆயுர்வேதத்தில் முறையான கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சியின் அவசியத்தை அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் வலியுறுத்தியதை நினைவுகூர்ந்த அவர், அஷ்டவைத்ய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள் மற்றும் சிகிச்சை மரபுகளை ஆவணப்படுத்துவது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணி என்றார்.

கேரளத்தில் உள்ள ஆயுர்வேதக் கல்லூரிகள், ஆயுஷ் அமைச்சகம் மற்றும் ஜாம்நகரில் உள்ள உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும், நம்பகத்தன்மை மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலான பஞ்சகர்மா சிகிச்சைக்கான சர்வதேச வழிகாட்டி மையமாக கேரளத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஆளுநர் ஓம் பிரகாஷ் மாத்தூர், மத்திய சுற்றுலா மற்றும் பெட்ரோலியத் துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி, சுகாதாரம் மற்றும் தேவஸ்வம் துறை அமைச்சர் கே. முரளீதரன், உயர் கல்வித் துறை அமைச்சர் ரோஜி எம். ஜான் ஆகியோர் பங்கேற்றனர்.